# அறஇலக்கியங்களில் நாணம்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**

சிரேஷ்ட விரிவுரையாயர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

ecumaran@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கமருவியகாலத்தில் தோற்றம் பெற்ற அறநீதி இலக்கியங்கள் மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான ஒழுக்க நெறிகளை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தன. தனிமனிதன் குடும்பம், சமூகம் என்னும் நிலைகளில் ஒருவர் பின்பற்ற வேண்டியதும் விலக்க வேண்டியதுமான அற ஒழுக்கங்கள் அவற்றில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தனிமனித நிலையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களுள் நாணுடைமையும் ஒன்றாகும். நாணம் என்பது விரிந்த பொருளில் அறநீதி இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. ஆண்-பெண் இருபாலாருக்கும் பொதுவான நாணம், பெண்களுக்கே சிறப்பான நாணம் என வகைப்படுத்திப் பார்க்கும் அளவிற்கு நாணம் பற்றிய செய்திகள் அறநூல்களில் தரப்பட்டுள்ளன. நற்குணங்களால் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களால் வெட்கப்படுவதே ஆண்-பெண் இருபாலாருக்கும் பொதுவான அறமாகக் கூறப்படுகிறது. பெண்களுக்கு இயல்பான குணமாக அமையும் நாணம் அவர்களுக்கு அழகினைத் தருவதுடன் அவர்கள் தற்காத்துக் கொள்ளுதற்கான அரணாகவும் அமைகின்றது. ஆதலால் நாணத்தைப் பின்பற்றி ஒழுக வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் பின்பற்றாவழி ஏற்படும் தீங்கு குறித்தும் அறநீதி இலக்கியங்கள் விரிவாக விவாதிக்கின்றன. அறநீதி இலக்கியங்களில் நாணம் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளை அறிதல், அவற்றின் வழி நாணம் பற்றி அறஇலக்கிய ஆசிரியர்கள் சொல்ல வந்த விடயங்களை விளங்கிக் கொள்ளுதல், நாணம் குறித்து அறஇலக்கியங்களில் எடுத்துக்காட்டப்பட்ட விடயங்களின் சமூகப் பொருத்தப்பாட்டினை அறிந்து கொள்ளுதல் என்பன இந்த ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன. இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வின் மூலாதாரங்களாக சங்கமருவியகாலத்தில் தோற்றம் பெற்ற பதினொரு அறநூல்களும் அவற்றுக்கென எழுதப்பட்ட உரைகள், உரைக்குறிப்புகள், விளக்கங்கள் என்பன கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் தனிமனித ஒழுக்கங்களுள் ஒன்றான நாணத்தின் சிறப்பு, மனிதவாழ்வில் அதன் முக்கியத்துவம், அதனைப் பின்பற்றாவழி ஏற்படும் கேடு முதலானவற்றை அறிந்து கொள்ள முடியும்.

திறவுச் சொற்கள்: நாணம், நாணுடைமை, அறஇலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு

## அறிமுகம்

அறநூல்கள் தமிழின் தனித்துவத்தையும் சிறப்பையும் பறைசாற்றும் இலக்கியங்களாகும். சங்ககாலம் முதற்கொண்டே தமிழில் அறம் குறித்த சிந்தனை இருந்து வந்துள்ளது. எனினும் சங்ககாலத்தினை அடுத்து வந்த காலப்பகுதிகளில் அறத்தினை மட்டும் தனித்து விரித்துரைக்கும் நூல்கள் எழத் தொடங்கின. சங்கமருவிய காலப் பகுதியில் மட்டும் பதினொரு அறநூல்கள் தோற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. ஒருவர் தனிமனிதநிலை, குடும்பநிலை, சமூகநிலை என்பவற்றில் பேணவேண்டியதும்

விலக்க வேண்டியதுமான விடயங்களை இந்த அறநூல்கள் தெளிவாக எடுத்துரைத்தன. இதன் மூலம் ஒழுக்கம் நிறைந்த, கட்டுக்கோப்பான சமூகம் ஒன்றினை உருவாக்க அவை முனைவதைக் காணலாம். அறத்தினை எளிமையாகவும் தெளிவாகவும் மனங்கொள்ளத் தக்கவகையில் சுவையாகவும் எடுத்துரைத்த வகையில் தமிழில் எழுந்த அறநூல்கள் தனிக்கவனத்தினைப் பெறுகின்றன. இதனாலே தான் உலகளாவிய மதிப்பும் பாராட்டும் அவற்றுக்கு இற்றைவரை கிடைத்து வருகின்றன. பல மொழிகளிலும் விரும்பி அவை மொழிபெயர்க்கப்படுவதற்கும் இதுவே காரணமாகும்.

**நாணம்**

தனிமனிதன் ஒருவனின் ஒழுக்கத்தினைக் கட்டுப்படுத்தும் மிக முக்கியமான பண்பாக நாணத்தினை அறநூல்கள் குறிப்பிடுகின்றன. "நாணம்" என்பதற்கு அச்சம், அடக்கம், மதிப்பு வெட்கம், பெண்களுக்கு உரிய குணம், மானம் எனக் கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகின்றது *(1999: 601)*. நாணம் ஒருவரிடத்தில் இயல்பாகவே உள்ள குணம். அது பிறப்பில் இருந்து கூடவே வருகின்றது. ஒருவரின் ஒழுக்கத்தினைக் கட்டிக்காக்கின்றது. அறமல்லாதவற்றை செய்வதில் இருந்தும் பாதுகாக்கின்றது. வாழ்வை நெறிப்படுத்துகின்றது. இப்படித்தான் வாழவேண்டும் என வழிகாட்டுகின்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய ஒழுக்கங்களைப் பேணுவதோடு அவற்றை ஆளும் தன்மையைச் "சால்பு" எனப் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார் *(1963: 593)*. சால்பினைக் கொண்டவனே சான்றோன் எனப்படுகின்றான். சால்பெனும் ஒழுக்கம் நாணத்தினை இருப்பிடமாகக் கொண்டதாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

*ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்*
*நன்மை குறித்தது சால்பு. (குறள்: 1013)*

"உயிர்கள் எல்லாம் எவ்வாறு ஊனாலாகிய உடலினை இருப்பிடமாகக் கொண்டுள்ளனவோ அவ்வாறே சால்பு என்பது நாணத்தினை இருப்பிடமாகக் கொண்டது" என்பது இதன்பொருள். இதன் மூலம் நாணத்தின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுவதோடு தனிமனித ஒழுக்கங்களைக் கட்டுப்படுத்தும் அதன் இயல்பும் சுட்டப்பட்டுள்ளது. வில்லொன்றில் நாண் அம்பின் போக்கையும் வேகத்தினையும் எவ்வாறு சீராகக் கட்டுப்படுத்துகின்றதோ அதேபோல் தனிமனிதனின் ஒழுக்கத்தினை நேராக நகர்த்தவும் கட்டுப்படுத்தவும் நாணம் உதவுகின்றது.

நாணம் என்பதற்கு "...சால்பு, பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையராம் தன்மை." எனப் பரிமேலழகரும், "நாண் உடைமையாவது அறம், பொருள், இன்பங்களிற் பிறர் பழியாமல் ஒழுகுதல்" என மணக்குடவரும் "நாண் உடைமையாவது நீதி அல்லாது கண்டால் நாணுதல்" எனப் பாரதியாரும் குறிப்பிடுகின்றனர் *(1963: 607)*. இவற்றை நோக்கும் போது செய்யத்தகாத காரியங்களை அதாவது விலக்க வேண்டியவற்றைச் செய்வதால் ஏற்படக் கூடிய வெட்கத்தில் இருந்து ஒருவரைக் காக்கும் உயர்ந்த ஒழுக்கமாக நாணம் காட்டப்பட்டிருக் கின்றது. வெட்கம் அவமானத்திற்கும், அவமானம் கழிவிரக்கத்திற்கும் காரணமாகி ஒருவரைச் சதாகாலம் வாட்டும் ஆதலால் அத்தகைய இழிநிலையில் இருந்து காப்பாற்றிக் கொள்ள ஒருவர் நாணத்தினைப் பேணிக்கொள்ளுதல் வேண்டும் என அறநூல்கள் வலியுறுத்துகின்றன.

இதனாலே தான் தனிமனித ஒழுக்கங்களில் நாணுடைமை பற்றி அறநூல்கள் அதிகமாகவும் பல இடங்களிலும் சுட்டிக்காட்டுகின்றன. வள்ளுவர் "நாணுடைமை"

என்னும் அதிகாரத்தில் நாணத்தினைப் பற்றிச் சிறப்பாகத் தனித்துப் பேசியிருந்தாலும் திருக்குறள் முழுமையும் நாணம் பற்றிய செய்திகளை பல இடங்களில் குறிப்பிடப்பட்டுச் சென்றுள்ளார்.

**இருவகை நாணங்கள்**

அறநூல்கள் ஒருபுறத்தில் நாணத்தினை ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய பொதுவான ஒழுக்கமாகப் பேசும் அதேவேளை மறுபுறத்தில் அதனைப் பெண்களுக்குரிய சிறப்பான ஒழுக்கமாகவும் குறிப்பிட்டிருத்தல் நோக்கத்தக்கதாகும்.

கருமத்தால் நாணுதல் நாணுந் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. (குறள்: 1011)

என வள்ளுவர் இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். நாணம் "கருமத்தால் உண்டாகும் நாணம்", "திருநுதல் கண்ணதாய நாணம்" என இருவேறாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவற்றுள் கருமத்தால் ஏற்படும் நாணமே ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதாகும்.

**நாணத்தின் சிறப்பு**

நாணத்தின் சிறப்பினை அறநூல்கள் சுட்டிக்காட்டியுள்ளன. முதுமொழிக்காஞ்சி "ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் ... நலன் உடைமையின் நாணுச் சிறந்தன்று" (சிறந்த பத்து: 6) எனக்குறிப்பிடுகின்றது. நலன் என்பது அழகு. அழகுடைமையை விட நாணுடைமை சிறந்தது என்பது இதன் பொருள். ஒருவருக்கு உண்மையான அழகு நாணம் உடையவராக இருத்தல் என்பது இதனால் புலனாகும். இதனையே வள்ளுவரும்

ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (குறள்: 1012)

எனக் குறிப்பிடுகின்றார். மக்களின் சிறப்பியல்பாக விளங்குவதும் மற்றைய உயிரினங் களில் இருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டுவதும் நாணுடைமையே என்பது அவர் கருத்து. மற்றொரு குறளில் நாணமே சான்றோர்களுக்குச் சிறந்த அணிகலம் என்கிறார் வள்ளுவர்.

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. (குறள்: 1014)

ஆதலால் பிறர்க்கு வரும் பழிக்காகவும், தமக்கு வரும் பழிக்காகவும் ஒருவர் நாணவேண்டும் என்றும் (1015) நாணத்தினை வேலியாகக் கொண்டு தனது வாழ்க்கையை ஒருவர் அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் (1016) அவர் வலியுறுத்துகின்றார். மேலும் நாணத்தின் பெருமையை உணர்ந்தவர் நாணத்துக்காக உயிரையும் விடத் தயங்கமாட்டார் என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர். (குறள்: 1017)

**நாணத்தைப் போற்றாமை**

நாணத்தினை வாழ்க்கையில் போற்றாமையால் வருங்கேடு பற்றியே அறநூல்களில் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நாணில்லாத வாழ்கையை அவை இழித்தும் பழித்தும் கூறுகின்றன. நான்மணிக்கடிகை "பொறிகெடும் நாணற்ற

போழ்தே…" (நான்மணி: 44) என்கின்றது. நாணம் நீங்கினால் இகலோக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான செல்வங் கெடும் என்பது இதன் பொருள். சிறுபஞ்சமூலம் செய்யத் தகாதன செய்வதற்கு ஒருவன் நாண வேண்டும். அப்படி நாணாதவன் சால்புடையவன் எனக் காட்டிக்கொள்ளுதல் நகைப்புக்கு இடமாம் என்கின்றது.

நாணிலான் சால்பும், நடையிலான் நன்னோன்பும்,
ஊணிலான் செய்யும் உதாரமும், - ஏணிலான்
சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகம்மேய் நாடின் நகை. (சிறுபஞ்சமூலம்: 10)

மற்றொரு செய்யுளில் நாணமில்லாதவனை நாயுடன் ஒப்பிடுகின்றார் சிறுபஞ்சமூல ஆசிரியர்.

நாண் இலன் நாய் நன்கு நள்ளாதான் நாய் பெரியார்ப்
பேண் இலன் நாய் பிறர் சேவகன் நாய் ஏண் இல்
பொருந்திய பூண் முலையார் சேரி, கைத்து இல்லான்,
பருத்தி பகர்வுழி நாய். (சிறுபஞ்சமூலம்: 93)

நாணமில்லாதவன், பிறரிடம் நட்புக் கொள்ளாதவன், பெரியாரைப் பாதுகாக்காதவன், பிறர்க்குப் பணியாளாய் இருப்பவன், உயர்வில்லாத நகையணிந்த பரத்தையரது தெருவில் கைப்பொருள் இல்லாதவன் நாயைப் போன்றவனாவான் என்பது இதன் பொருள். வள்ளுவரும் நாணில்லாதவரின் பெருமித நடையை "நோய்" எனக் குறிப்பிட்டுள்ளமை (குறள்:1014) இவ்விடத்தில் பொருத்தி நோக்கத்தக்கது. முதுமொழிக்காஞ்சி ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் … நாணில் வாழ்க்கை பசித்தல் துவ்வாது (துவ்வாப்பத்து: 3) என்கின்றது. அதாவது நாணமில்லாமல் உண்டு உயிர் வாழும் வாழ்க்கையானது பசித்திருத்தலையே ஒக்கும் என்கின்றது. திரிகடுகம் நாணில்லாதவன் சந்ததி இழந்து வருந்துவான் என்கின்றது

நன்றிப் பயன் தூக்கா நாண் இலியும், சான்றார் முன்
மன்றில் கொடும்பாடு உரைப்பானும், நன்று இன்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும், - இம் மூவர்
எச்சம் இழந்து வாழ்வார். (திரிகடுகம்: 62)

இன்னாநாற்பது நற்பண்பு கொண்டவர்கள் பழிக்கு நாணாமல் இருந்தால் அது பெருந்துன்பம் எனக் குறிப்பிடுகின்றது.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
ஈலத்தகையார் நாணாமை யின்னாவாங் இன்னா
கலத்தல் குலமில் வழி (இன்னாநாற்பது: 19)

வள்ளுவர் மூன்று குறள்களில் நாணமில்லோரைக் கடுமையாகச் சாடுகின்றார். நாணமற்றோரை அறம் கைவிட்டு விடும் என்றும், நாணில்லாதவன் நன்மை எல்லாவற்றையும் இழந்து விடுவான் என்றும் நாணில்லாதவன் வாழ்க்கை நூலினால் இயக்கப்படும் மரப்பாவைக்கு ஒப்பானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. (குறள்: 1018)

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. (குறள்: 1019)

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று. (குறள்: 1020)

**கள்ளுண்பானும் நாணமும்**

நாணம் கள்ளுண்பானிடம் இருந்து இயல்பாக நீங்கிவிடும் எனத் திருக்குறள் கூறுகின்றது. வள்ளுவர் கள்ளுண்ணாமையை வலியுறுத்தும் போது,

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு; (குறள்: 924)

எனக் குறிப்பிடுகின்றார். நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப் படும் விரும்பத்தக்காத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செல்வாள் என்பது இதன் பொருள். இங்கு நாணத்தினை நல்லாள் என வள்ளுவர் உருவகித்துள்ளமை நோக்கத் தக்கது. பரிமேலழகர் "இழிந்தோர் பால் நில்லாமையின் நல்லாள்... எனக் குறிப்பிட்டார்" என இதற்கு விளக்கம் கூறுகின்றார். நாணம் இழிந்தவரிடத்தில் தங்கியிருக்காது நீங்கிடும் என்பது இதனால் அறியவருகின்றது. கள்ளுண்பாரை உலகத்தார் கண்டு அஞ்சி விலக்கியும் ஒதுக்கியும் விடுவதாலும் கள்ளுண்பவர் போதையில் பெருங்குற்றங்களைச் செய்து விடுவதாலும் நாணம் அவரை விட்டு நீங்கிவிடுவதாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**புகழ்ச்சியும் நாணமும்**

புகழ்ச்சியினால் வரும் நாணம் பற்றித் திரிகடுகம் எடுத்துக்காட்டுகின்றது. புகழ்தல் என்பது ஒருவரின் செயலை அல்லது திறனை மற்றொருவர் மிகைபடுத்திப் பாராட்டுதல் ஆகும். அங்ஙனம் ஒருவர் தன்னை மிகைபடுத்திப் புகழும் போது சான்றோனிடம் ஏற்படும் கூச்ச அல்லது வெட்க உணர்வினையே நாணம் என இங்கு குறிப்பிடுகின்றார் மற்றவர்கள் புகழும் போது அதனைப் பெருமையாகக் கருதாது அதற்கு நாணுவதே சான்றோருக்கு உண்மையான அழகு எனக் குறிப்பிடும் திரிகடுகம். அதுவே அவருக்குப் பெருஞ் செல்வமாகும் எனச் சுட்டுகின்றது.

பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்
திறன் வேறு கூறின் பொறையும், அற வினையைக்
கார் ஆண்மை போல ஒழுகலும், - இம் மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு. (திரிகடுகம்: 6)

**நாணத்தினால் தண்டித்தல்**

நாணத்தினால் ஒருவரைத் தண்டித்து அவரை வெட்கமும் கழிவிரக்கமும் அடையும் படி செய்ய முடியும் என அறநூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. வள்ளுவர் பிழைசெய்தாரைத் தண்டிப்பதற்கு நாணமடையச் செய்வதே சிறப்பான வழி எனச் சுட்டுகின்றார். தண்டனைகளுள் அதுவே மிகப்பெரிய தண்டனையாக அமையும் என்பது அவர் கருத்து.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்துவிடல் (குறள்: 314)

இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும் என்பது இதன் பொருள்.

**காமத்தினை நாணத்தால் கட்டுப்படுத்தல்**

மனிதரிடம் காம உணர்ச்சி இயல்பாக உள்ளது. மனித இனத் தொடர்ச்சிக்கும் இன்பியல் வாழ்க்கைக்கும் அது நிலைக்களனாக விளங்குகின்றது. மனிதன் பகுத்தறிவு படைத்தவன். எது சரி எது பிழை என்பதைத் தெளிவாக அறிந்திருப்பவன். காம உணர்ச்சி யினைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தி வாழ்வதே அவனது பகுத்தறிவான வாழ்க்கைக்கு ஏற்றதாகும். விலங்குகள் போன்ற உயிரினங்களில் இருந்து மனிதனை மேம்பட்டவனாகக் காட்டும் மிக முக்கிய குறிகாட்டியாகவும் இது அமைந்திருக்கின்றது. காமத்தினைக் கட்டுப்படுத்தத் தவறின் அது தீராத துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் இட்டுச் செல்லும். ஆதலால் நாணம் உடையவர்கள் காமத்தினைக் கட்டுப்படுத்துவர். குறிப்பாகப் பிறரது மனைவியரைக் காம உணர்வோடு நோக்கார். சீரான வாழ்க்கையை வாழ்வர். இதனை நாலடியார்

அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால் - நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார். (நாலடியார்: 81)

எனக் குறிப்பிடுகின்றது. காமத்தால் வரும் அச்சம் பெரிது! அந்த அச்சத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது பெறும் இன்பம் சிறிதே! யோசித்துப் பார்த்தால் அரசனால் கொலைத் தண்டனையும் உண்டு! எந்நாளும் நரக வேதனையை அடைதற்குரிய மிக்க பாவச் செயலாகும் அது! ஆதலால் நாணம் உடையவர்கள் பிறன் மனைவியை விரும்பாதிருப்பாராக! என்பது மேலே காட்டிய செய்யுளின் பொருள்.

இதனையே நாலடியார் மேலும் ஒரு செய்யுளில் நாணம் உள்ளவர்கள் பலர் மத்தியில் அவமானப்பட நேரிடும் என்ற எண்ணத்தில் காம உணர்வினை தமக்குள் தணித்துக் கொள்வர் எனக் குறிப்பிடுகின்றது.

பரவா, வெளிப்படா, பல்லோர்கண் தங்கா
உரவோர்கண் காமநோய் ஓஓ!- கொடிதே!
விரவாருள் நாணுப் படல்அஞ்சி யாதும்
உரையாதுஉள் ஆறி விடும் (நாலடியார்: 88)

**பெண்களிடம் உள்ள நாணம்**

அச்சம், மடம், நாணம் என்பன பெண்களிடம் இருக்க வேண்டிய சிறந்த குணங்களாகக் கூறப்பட்டு வந்துள்ளன (தொல். பொருள். களவியல்: 99). இங்கு குறிப்பிடப்படும் நாணம் என்பது பெண்களுக்கு அழகு சேர்ப்பதாகவும் அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதாகவும் அறநூல்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாரிடமும் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நாணத்தில் இருந்து இது வேறுபட்டதாகவும் தனித்துவமானதாகவும் விளங்குவதைக் காணலாம். நான்மணிக் கடிகை நாணம் பெண்களுக்கு அணிகலன் போன்றது எனக் குறிப்பிடுகின்றது.

நிலத்துக்கு அணி என்ப. நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணி என்ப தாமரை பெண்மை

நலத்துக்கு அணி என்ப நாணம் தனக்கு அணி

தான் செல் உலகத்து அறம். (நாண்மணிக்கடிகை: 9)

நாணத்தினைப் பெண்கள் செயற்கையாக வருவித்துக் கொள்ள வேண்டிய தில்லை. அது அவர்களிடம் இயல்பாகவே அமைந்து விடுவதாக சிறுபஞ்சமூலம் சுட்டுகின்றது (சிறுபஞ்சமூலம்: *94*). நாணத்தினைப் பெண்களின் அணிகலம் எனத் திரிகடுகம் கூறுகின்றது.

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற

பெண்ணுக்கு அணிகலம் நாண் உடைமை..." (திரிகடுகம்: 52)

நாலடியார் நாணம் மிகுந்த குலமகளின் அழகு, அறிவிற்சிறந்த வீரனின் கையில் உள்ள கூரிய வாள் போல் யாராலும் நெருங்குதற்கு அரிதாம் என்கின்றது.

"............................................... - தெள்ளிய

ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ

நாணுடையாள் பெற்ற நலம். (நாலடியார்: 386)

குலமகளிரைப் பொது மகளிரிடம் இருந்து வேறுபடுத்தும் ஓர் அடையாள மாகவும் இந்த நாணம் இருப்பதாக நாலடியார் கூறுகின்றது. குலமகளிரிடம் நாணம் எப்போதும் காணப்படும். அது ஒவ்வொரு பொழுதும் மீண்டும் மீண்டும் வெளிப்பட்டு நிற்கும் என்கிறார்.

எஞ்ஞான்றும் எம்கணவர் எம்தோள்மேல் சேர்ந்தெழினும்

அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால் - எஞ்ஞான்றும்

என்னை கெழீஇயினர் கொல்லோ பொருள்நசையால்

பன்மார்பு சேர்ந்தொழுகு வார். (நாலடியார்: 385)

நாள்தோறும் எம் கணவர் எம் தோளைத் தழுவி எழுந்தாலும் முதல்நாள் நாணம் அடைந்ததைப் போலவே இன்றும் நாணம் அடைகின்றோம். (இப்படியிருக்க) பொருள் ஆசையால் பலருடைய மார்பையும் தழுவிக்கொள்ளும் பொது மகளிர் எப்படித்தான் நாணமின்றித் தழுவுகின்றனரோ? என்பது இதன் பொருள். இங்ஙனம் அழகாய், அரணாய் விளங்கும் நாணத்தைத் துணைக்கொண்டு பெண் தன்னைக் காத்துக்கொள்வதுடன் தற்கொண்டானையும் பேணிக் கொள்ள வேண்டும் என மற்றொரு செய்யுளில் நாலடியார் வலியுறுத்துகின்றது (நாலடியார்: *384*).

**காமமும் நாணமும்**

திருக்குறளின் காமத்துப்பாலில் பெண்களுக்கேயுரிய நாணம் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இன்பியல் வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்குவது காமம். அது காதலர் உள்ளத்தினைக் கனல் போல் வாட்டுவது. நாணத்தோடு விளங்கும் பெண்கள் காமத்தினால் எங்ஙனம் வாட்டமுறுகின்றனர், நாணத்தோடு எப்படிப் போராடுகின்றனர் என்பதைப் "படர்மெலிந்திரங்கல்" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் எடுத்துக்காட்டு கின்றார். தன் தலைவர் மீதுகொண்ட காதலால் வாடும் பெண் தன் காமத்தை வெளிப்படுத்த முடியாமலும் அதனைத் தன்னுள் அடக்கி வைத்திருக்க முடியாமலும் நாணம் என்னும் சிறையில் அகப்பட்டு தவிப்பதை அவ்வதிகாரத்தில் வரும் குறள்கள் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளன. "காமம்", "நாணம்" இரண்டிற்கும் இடைப்பட்டுக் கலக்கமுறும் பெண்ணின் உள்ளத் தவிப்பினை இங்கு அவதானிக்க முடிகின்றது.

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு

உரைத்தலும் நாணுத் தரும். (குறள்:1162)

என்கின்றார். "காமநோயைப் பிறர் அறியாமல் முற்றிலும் மறைக்கவும் முடியவில்லை அதனைக் காதலர்க்குச் சொல்லவும் முடியவில்லை. நாணம் என்னைத் தடுத்து வருத்துகின்றதே" எனத் தன் உள்ள வருத்தத்தினை வெளிப்படுத்துவதாக இக்குறள் அமைகின்றது. மேலும்

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்

நோனா உடம்பின் அகத்து. (குறள்: 1163)

என்னும் குறளில் துன்பத்தைப் பொறுக்காமல் வருந்துகின்ற என் உடம்பில் உயிரைக் காவடித்தண்டாகக் கொண்டு காமநோயும் நாணமும் இருபக்கமும் தொங்குகின்றன. எதனைப் பேணி எதனை விடுவது எனத் தெரியாமல் தவிக்கின்றேன் என்கிறாள் தலைவி.

உள்ளத்தின் மீதுற்ற காமம் நாணமாகிய வேலியினை எப்படித் தாண்டுகின்றது என்பது "நிறையழிதல்" என்னும் அதிகாரத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றது. நாணத்தினை காமம் அடக்கி மேலெழுவதாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்

நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (குறள்: 1251)

எனும் குறளில் நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய நிறை என்று சொல்லப்படும் கதவை காமம் ஆகிய கோடரி உடைத்து விடுகிறதே எனக் குறிப்பிடுகின்றார். இங்கு நாணத்தினை கற்பாகிய கதவுக்கு வலிய பூட்டு என வள்ளுவர் சுட்டிக்காட்டுதல் காண்க. மனம் நிறைந்த காதலர் காமத்தால் விருப்பமானவற்றைச் செய்யும் போது நாணம் என்பது எங்கே சென்று விடுகிறது என்பதை உணரமாட்டாதவளாய் தலைவியிருப்பதாக மற்றொரு குறளில் வள்ளுவர் கூறுகின்றார்.

நாணென ஒன்றோ அறியலாம் காமத்தால்

பேணியார் பெட்ப செயின். (குறள்: 1257)

எனக் குறிப்பிடுகின்றார். இதனையே" பசப்புறுபருவரல்" என்னும் அதிகாரத்தில் தலைவர் எனக்குக் காமநோயினையும் பசலை நிறத்தையும் கைம்மாறாகக் கொடுத்து விட்டு, என் சாயலையும் நாணத்தையும் அவர் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார் எனத் தலைவி கூற்றாக வெளிப்படுத்துகின்றார்.

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா

நோயும் பசலையும் தந்து. (குறள்: 1183)

உள்ளப் புணர்ச்சிக் கண் பெண்களின் நாணத்திற்கும் காமத்திற்கும் இடையிலான போராட்டத்தினை இங்ஙனம் இலக்கிய பூர்வமாக வள்ளுவன் எடுத்துக்காட்டியிருக்கும் நயம் நோக்குதற்குரியது. வள்ளுவத்தினை அறநூல் என்பதற்கும் அப்பால் சிறந்த இலக்கியமாக அடையாளப்படுத்தும் இடங்கள் இவையாகும்.

**நாணமும் ஆண்களும்**

காமத்தினால் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் வருந்துவதாக "நாணுத்துறவுரைத்தல்" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். தலைவியைக் கண்டு காமுற்ற தலைமகன் அவள் ஏற்படுத்திய காமநோயினால் வருந்துகின்றான். தலைவியின் பெற்றோர் அவளைத் தனக்கு மணம் முடித்துத் தருவார்களா எனக் கலங்குகின்றான். அவளை அடைவதற்கு வழிதெரியாமல் தவிக்கின்றான். இக்கலக்கமும் தவிப்பும்

அவனிடம் இருந்த நாணத்தினைக் களவாடிவிடுகின்றன என்கிறார் வள்ளுவர்.

காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடுஷ

நல்லாண்மை என்னும் புணை. (குறள்:1134)

இங்கு காமத்தினை கடும் வெள்ளமாக உருவகிக்கும் வள்ளுவர் அது நாணத்தினை அடித்துச் சென்று விடுவதாகக் குறிப்பிடுகின்றார். ஆண்மகனிடம் இருக்கும் நாணமே அவனின் உரன், பெருமை ஆகிய ஆண்மைப் பண்புகளைப் பேணி வந்தது (தொல். பொருள். களவியல்: 98). ஆனால் அது காமத்தால் அழிந்து விடுகின்றது. இதனால் நாணத்தினை இழந்த தலைமகன் மற்றையோர் தன்னைப் பழிப்பார்களே என்ற எண்ணமின்றி மடல் ஏறத் துணிகின்றான். காதலின் பிரிவால் உண்டாகிய துன்பத்தைப் பொறுக்காத என் உடம்பும் உயிரும், நாணத்தை நீக்கி நிறுத்தி விட்டு மடலூரத் துணிந்தனவே என்றும் நாணமும் நல்ல ஆண்மையும் முன்பு பெற்றிருந்தேன், இப்போது காமம் மிக்கவர் ஏறும் மடலையே உடையவன் ஆகிவிட்டேனே என்றும் அவன் புலம்புவதைப் பின்வரும் குறள்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்

நாணினை நீக்கி நிறுத்து. (குறள்: 1132)

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்

காமுற்றார் ஏறும் மடல். (குறள்: 1133)

## முடிவுரை

ஆக, மனித வாழ்வின் பல்வேறு நிலைகளில் பின்பற்றப்பட வேண்டிய மிக முக்கிய அறமாக நாணமுடைமையினை அறநூல்கள் எடுத்துக்காட்டியுள்ளன. நாணத்தின் சிறப்பு, அதன் முக்கியத்துவம், அதனைப் பேணாவழி ஏற்படும் இழிவு என்பன சுவையாகவும் படிப்போர் மனங்கொள்ளத்தக்க வகையிலும் பொருத்தமான எடுத்துக்காட்டுக்கள், உவமைகள் உருவகங்கள் வழியாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அறநெறிப்படி ஒழுகாவழி இழுக்குண்டாகும் என நாணப்படுகின்றவர் பிழையான காரியங்களை ஒருபோதும் செய்யமாட்டார். நல்லவற்றையே செய்ய முனைவார். அந்தவகையில் ஏனைய தனிமனித அறங்களையும் அவற்றின் நோக்கங்களையும் அடைந்து கொள்ள நாணம் துணை செய்கின்றது. அதேபோல பெண்களுக்கே உரித்தான நாணம் அரணாகவும் அணிகலனாகவும் விளங்கி அவர்களுக்கு அழகினையும் பாதுகாப்பினையும் தருகின்றது. நாணம் பற்றி அறநூல்களில் விதந்துரைக்கப்பட்ட இவ்விடயங்கள் எக்காலத்துக்கும் பொருத்தமானவை. இன, மத, மொழி, நிற வேறுபாடுகளைக் கடந்து யாவருக்கும் பொதுவானவை. மனிதப்பண்பைக் கட்டியெழுப்பவும் வளர்க்கவும் உதவுபவை. இதனால் அவற்றை வயது வேறுபாடின்றி ஒவ்வொருவரும் உணர்ந்து பேணி வரவேண்டும். அதுவே வாழ்வாங்கு வாழ்வதற்கான உயரிய வழியாகும்.

## உசாத்துணைகள்


1. கழகத் தமிழ் அகராதி (1999). தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
2. திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு. (1963). (பதி.) ஜகந்நாதன். கி.வா. ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், கோயம்புத்தூர்.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் (1948) (பதி) கணேசையர், சி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
4. நாலடியார். (2010). (பதி.) புலியூர்கேசிகன், கௌரா புத்தக மையம், சென்னை.
5. பதினெண் கீழ்க்கணக்கு பாகம் 1, பாகம் 2, பாகம் 3, (2001), (உரை) இராசாராம், துரை, முல்லை நிலையம், சென்னை.